# முகிலன் மாயமான விவகாரம்: 148 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது

## உயர்நீதிமன்றத்தில் தகவல்

**சென்னை, மார்ச் 4:** சூழலியல் செயல்பாட்டாளர் முகிலன் மாயமான விவகாரம் தொடர்பாக இதுவரை 148 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மனித உரிமை ஆர்வலரும், வழக்குரைஞருமான ஹென்றி திபேன் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவில், கடந்த 2018-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் தேதி தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் பலியாகினர். இந்த சம்பவத்துக்கு காரணமான போலீஸ் உயர் அதிகாரிகள் தொடர்பான விடியோவை சூழலியல் செயல்பாட்டாளர் முகிலன் கடந்த பிப்ரவரி 15-ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் வெளியிட்டார். பின்னர் பிப்ரவரி 15-ஆம் தேதி இரவு சென்னையிலிருந்து நாகர்கோயிலுக்குச் செல்லும் ரயிலில் சென்றுள்ளார். அதன்படி பிப்ரவரி 16-ஆம் தேதி மதுரைக்கு வந்திருக்க வேண்டிய அவரை காணவில்லை. மேலும் ஒலக்கூர் ரயில் நிலையம் வரை தொடர்பு எல்லைக்குள் இருந்த அவரது செல்லிடப்பேசியைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதுதொடர்பாக காவல் துறையினரிடம் புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே முகிலனைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், மனு தொடர்பாக சென்னை மாநகர காவல் ஆணையர், விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட போலீஸார் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.



இந்த வழக்கு நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன் மற்றும் எம்.நிர்மல்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் சுதா ராமலிங்கம், சிபிசிஐடி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவர், மக்கள் கண்காணிப்பகம் அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகளிடம் இரண்டரை மணி நேரம் விசாரித்துள்ளனர். இந்த விசாரணையின் போது வழக்குக்கு தொடர்பு இல்லாத கேள்விகளைக் கேட்டுள்ளார். இதே போல ராஜபாளையம் காவல் நிலைய ஆய்வாளர் நாகராஜன் நாராயணன், முகிலன் எங்கே என்ற முகநூல் பதிவுக்கு சமாதி என பதிவிட்டுள்ளதாகக் கூறி வாதிட்டார். அப்போது நீதிபதிகள் போலீஸாரின் புலன் விசாரணயில் உயர்நீதிமன்றம் தலையிட முடியாது என தெரிவித்தனர். அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான அரசு குற்றவியல் வழக்குரைஞர் அய்யப்பராஜ், இந்த வழக்கு கடந்த பிப்ரவரி 25-ஆம் தேதியன்று சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டது. சிபிசிஐடி விசாரணைக்கு

மாற்றப்பட்ட அடுத்தநாள் முதல் விசாரணை தொடங்கி விட்டனர். முகிலனின் உறவினர்கள், நண்பர்கள் உள்பட இதுவரை 148 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதனையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், விசாரணையை வரும் மார்ச் 18-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.